# நாலு பழங்கள்

கி.வா. ஜகந்நாதன்




அமுத நிலையம்

வைப்பேன். அதில் யார் தேறுகிறார்களோ அவரையே கல்யாணம் பண்ணிக் கொள்வேன்'' என்று அவள் சொன்னாள்.

''எப்படி நீ சோதனை பண்ணுவாய்?'' என்று அவள் தந்தையாகிய அரசன் கேட்டான்.

''எனக்கு நாலு பழம் வேண்டும். அந்தப் பழங்கள் இப்படி இருக்க வேண்டுமென்று சொல்லுவேன். அவற்றை யார் கொண்டு வந்து தருகிறாரோ, அவரையே நான் மணப்பேன்'' என்று அவள் சொன்னாள்.

''என்ன பழம்?'' என்று அரசன் கேட்டான்.

''நாலு வகையான பழங்களை நான் சொல்லு கிறேன். அவற்றைக் கேட்டுக்கொண்டு ஒரு வாரத்தில் கொண்டுவந்து கொடுத்தால் அவரைக் கெட்டிக் காரர் என்று தெரிந்து கொண்டு திருமணம் செய்து கொள்வேன்'' என்று அவள் சொன்னாள்.

ஒரு நாள் ராஜசபை கூடியது. தனக்கு உரிய கணவனைத் தேர்ந்தெடுக்க அரசகுமாரி அந்தக் கூட்டத்தைக் கூட்டினாள். பல தேசத்து அரசகுமாரர் களும் வந்திருந்தார்கள். அரசனும் அரசியும் அவர் களுடைய குருவும் வேறு பல பெரிய மனிதர்களும் சபையில் கூடியிருந்தார்கள்.

அரசன் தன் புதல்வியைப் பார்த்து, ''உனக்கு எந்த வகையான பழங்கள் வேண்டுமென்பதைச் சொல். இங்கே வந்திருக்கும் அரச குமாரர்கள் இன் னும் ஒரு வாரத்தில் அந்தப் பழங்களைக் கொண்டு

அடுத்த வாரம் வந்தது. மறுபடியும் சபை கூடியது. இப்பொழுது பெரும் கூட்டம் கூடியது. அரசகுமாரி கேட்ட அதிசயமான பழங்களை யார் கொண்டு வரப் போகிறார்கள் என்று பார்ப்பதற்காக அவர்கள் கூடியிருந்தார்கள்.

அரசனும், அரசியும், குருநாதரும் சபையில் வந்து அமர்ந்தார்கள். அரசகுமாரியும் சபைக்கு வந்தாள். முன்னால் சபை கூடியபோது வந்திருந்த அரசகுமாரர்களில் பலர் வரவில்லை. சில பேர்களே வந்திருந்தார்கள். அவர்களும் வேடிக்கை பார்க்க வந்தார்களே ஒழிய, அரசகுமாரி சொன்ன நிபந்தனைகளை நிறைவேற்றவில்லை.

அப்பொழுது அரசன், "என் பெண் சொன்ன பழங்களை யாராவது கொண்டு வந்திருக்கிறார்களா?" என்று கேட்டான்.

சபையில் அமைதி நிலவியது. எந்த அரசகுமாரன் எந்தப் பழங்களைக் கொண்டு வந்திருக்கிறான் என்று தெரிந்து கொள்வதற்கு, வந்திருந்த எல்லோரும் ஆவலாக இருந்தார்கள்.

அப்பொழுது ஓர் அரச குமாரன் எழுந்தான். "நான் அரசகுமாரி சொன்ன நான்கு பழங்களையும் கொண்டுவந்திருக்கிறேன்" என்றான்.

எல்லோரும் அவனையே பார்த்தார்கள். அரசகுமாரி எழுந்தாள்; "பழமானாலும் காயாகவே இருக்கும் பழம் எது?" என்று கேட்டாள்.

உடனே அந்த அரசகுமாரன் பழுத்து முதிர்ந்து உதிர்ந்த தேங்காய் ஒன்றை எடுத்து வைத்தான்.

இனி நான்காவது சோதனை ஒன்றுதான் பாக்கியிருந்தது. எல்லோருடைய ஆவலும் உச்சக் கட்டத்தை அடைந்தது.

"கொட்டையை உமிழ வேண்டிய அவசியம் இல்லாமல் தின்னும் பழம் எது?" என்று அரசகுமாரி கேட்டாள்.

"இதோ இது தான்" என்று அரசகுமாரன் ஒரு முந்திரிப் பழத்தை எடுத்து வைத்தான். அதில் பழத்துக்கு முன்னாலே கொட்டை ஒட்டிக்கொண்டு இருந்தது. "இந்தப் பழத்தைத் தனியே எடுத்துத் தின்று விடலாமே! விதைக்கு ஒன்றும் நேராதே!" என்று அரசகுமாரன் சொல்லிச் சிரித்தான்.

நான்கு சோதனைகளிலும் வென்ற அரச குமாரனிடம் அரசன் எழுந்து சென்று அவன் கையைப் பிடித்துக்கொண்டுவந்து தன் அருகே உள்ள ஆசனத்தில் அமர்த்தினான். அங்கேயே அரசகுமாரி அவன் கழுத்தில் ஒரு மாலையைப் போட்டாள்.

அதன் பிறகு ஒரு நல்ல நாளில் இருவருக்கும் திருமணம் மிகச் சிறப்பாக நடந்தது.

